மாண்புமிகு திரு. சி. என். அண்ணதுரை : மத்திய அரசினிடத்தில் அதைப்பற்றி பல முறை வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மத்திய அரசும் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்று பல முறை நமக்குச் சொல்லிவிட்டார்கள். ஆனல், நிதிக் கமிஷன் வருகிற நேரத்தில் இந்தப் பிரச்னை ஆராயப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மதுரை ராஜா மில்ஸ் கதவடைப்பு

திரு. என். சங்கரய்யா : தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 42-ன் கீழ் பின்வரும் அவசரப் பொது முக்கியத்துவமுள்ளதொரு பொருள் பற்றி விவாதிக்க, சட்டப் பேரவையின் இதர அலுவல்களை ஒற்றி வைக்க வேண்டும் என கோருவதற்கு இதன் மூலம் முன்னறிவிக்கை கொடுத்திருக்கிறேன்:—

"மதுரை நகரில் உள்ள ராஜா மில்ஸ், கடந்த சில மாதங்களாக மூடப்பட்டிருப்பதினல் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டுள்ளார்கள்."

தலைவர் அவர்களே, இதுபற்றி ஒரு சில வார்த்தைகள் மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த மில்ஸ் ஏற்கெனவே நடந்து வந்து, நீண்ட காலமாக ஏராளமாக லாபம் சம்பாதிக்கப்பட்டிருக்கிறது. தற்பொழுது மில்களில் துணித் தேக்கம், நூல் தேக்கம் இருப்பதால் இந்த மில் மூடப்பட்டது என்பது இல்லை. தொழிலாளர்களுக்கு ஊதியத்தைக் குறைத்து, அவர்கள் ஊதியத்தை மிகவும் குறைவாக வாங்கிக்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கும்படி நிர்ப்பந்திப்பதற்காக நீண்ட காலமாக மில்லை மூடியிருக்கிருர்கள். அதனல் மதுரை நகரத்தில் நூற்றுக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் பெரிய கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கின்றன. ஆகவே, சம்பந்தப்பட்ட இலாகா மூலம் மேற்படி மில்லின் உரிமையாளர்களையும், தொழிலாளர்கள் பிரதிநிதிகளையும் கூப்பிட்டு வைத்துப் பேசுவதன் மூலம் இந்த மில்லைத் திறப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. மில்லைத் திறந்த பின்னர், இரண்டு தரப்பினரும் கூடிப்பேசி இந்த மில்லை நடத்துவதற்கு வழியிருக்கிற காரணத்திஞல், இந்த மில் மூடியிருப்பதனல் ஏற்கெனவே இந்த மாநிலத்திலுள்ள தொழிலாளர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டம் மேலும் பெருகியிருப்பதினல், இந்தக் காரியத்தில் அரசு உடனே கவனம் செலுத்தவேண்டும் என்பதற்காக தொழிலாளர்களின் சார்பாக இந்தப் பிரச்சனையை விவாதிப்பதற்கு பேரவையின் இதர அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொண்டுவந்துள்ள ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், அவர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் அந்த மில் மூடப்படுவதற்கு காரணம் என்ன என்பதை ஆராய்ந்து, எந்த வகையில் அதை நீக்கலாம் என்பதுபற்றி அந்தத் துறை அதிகாரிகள் கலந்து ஆலோசித்துக் கொண்டிருக்கிருர்கள். அதற்கான காரணத்தை கண்டறிந்து, அதை நீக்குவதற்கு சிலபல நேரம் காலத் தாழ்வு ஏற்படுகிறது. உடனுக்குடன் இருக்கும் நிலைமையை ஆராய்ந்து மில்களை திறப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொண்டு வருகிறோம். கடன் வசதி கொடுப்பது, பாங்குகள் மூலம் உத்தரவாதம் கொடுப்பது போன்ற முயற்சியில் ஈடுபட்டு, சம்பந்தப்பட்டவர்களை கலந்து ஆலோசித்து, மூடப்பட்ட மில்களை திறப்பதற்கான முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுக்கொண்டிருக்கிருர்கள். ஆகவே, இதை இந்த விவாதித்து

1968 மார்ச் 22] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

முடிவு காணவேண்டிய நிலை இல்லை. ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்குள்ளும் இது வராது. அதிகாரிகள் இதில் தக்க கவனம் செலுத்தி வருகிறார்கள் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. கவன ஈர்ப்பு

நெல்லை மாவட்டத்தில் சில வட்டங்களில் பருவமழையின்மையும் குடும்பக் கார்டு மூலம் உணவுப் பொருள்கள் வழங்கலும்

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : 1967–68-ம் வருடம் மழை பொய்த்துப் போய் நடப்பு பிசான நெல் மகசூலும், சங்கரன்கோவில் தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் பெரும்பகுதிகளில் தேய்வு ஏற்பட்டு, விவசாய மக்கள் பெருங் கஷ்டத்திற்குள்ளாயிருப்பதால் அவர்களுக்கு குடும்பக்கார்டு மூலம் அரிசி போன்ற தானியங்களை விநியோகம் செய்யவேண்டும் என்பதுபற்றிய அவசரமும், பொது முக்கியமுமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் 1967–68-ம் ஆண்டு பருவ மழை பொய்த்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன்கோவில், தென்காசி, செங்கோட்டை வட்டங்களில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அரசு அறியும். அதிலும் நாங்குநேரி வட்டத்தில் இராதாபுரம் துணைவட்டத்திலுள்ள மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதையும் அரசு அறியும். பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களில் வாழும் மக்களுக்கு அரிசி போன்ற உணவு தானியங்களை வழங்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து சங்கரன்கோவில் வட்டத்தில் 39 கிராமங்களுக்கும், தென்காசி வட்டத்தில் 46 கிராமங்களுக்கும், இராதாபுரம் துணை வட்டத்தில் 28 கிராமங்களுக்கும் குடும்பக்கார்டு மூலம் உணவுப் பொருள்கள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. செங்கோட்டை வட்டத்தில் எல்லா கிராமங்களுக்கும் ஏற்கெனவே குடும்பக்கார்டு மூலம் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகிறது. பருவமழை பொய்த்த எல்லா கிராமங்களுக்கும் குடும்பக்கார்டு மூலம் அரிசி போன்ற உணவுப் பொருள்கள் வழங்க அரசு ஏற்கெனவே நடவடிக்கை எடுத்துக் கொண்டுள்ளது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. என். குமாரசாமி அவர்கள் 41-வது விதியின் கீழ் அறிவிக்கை கொடுத்திருக்கும் கவன ஈர்ப்புத் தீர்மானம் அவர்கள் இங்கே இருப்பிடத்தில் இல்லாத காரணத்தினால், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

4. 1968–69-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகளின்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி).

கோரிக்கை எண் 20—தொழில்கள்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"கோரிக்கை எண் 20—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,93,09,100-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்கவேண்டும்"

திரு. செ. பாலசுப்பிரமணியன் : கொள்கைபற்றி விவாதிக்க—

"கோரிக்கை எண் 20 — தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,93,09,100-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.